

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் வி.சி.மோட்டூரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர ,ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### அமெரிக்காவில் 7,618 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து சென்னை திரும்பிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் திரண்டனர்!

சென்னை, செப்.15-

அமெரிக்காவில்7,618 கோடிரூபாய் முதலீடுகளை ஈர்த்து சென்னை திரும்பிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஜி.எஸ்.டி.சாலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆயிரக்கணக்கானோர்எழுச்சியுடன் கழக கொடிகளையும், வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி திரண்டு நின்று பாண்ட் வாத்தியம், மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வருகிற 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன்டாலர் என்ற உயரிய இலக்கினை அடைய, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்கு சென்றார்.

அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ, சிகாகோவில், உள்ள உலகின் 17 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் 7618 கோடி ரூபாய் தொழில் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தமிழ்நாடு முதல்வர் அவர்களின் முன்னிலையில் போடப்பட்டன.

பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களில் தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கவும், தற்போது உள்ள தங்களது தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்திடுவதற்கான தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றி விட்டு நேற்று காலை 8.00 மணியளவில் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆயிரக்கணக்கான கழகத்தினர் தமது கரங்களில் கழக கொடியையும், வரவேற்பு பதாகைகளை மகிழ்ச்சியுடன் ஏந்தி திரண்டுநின்று பாண்ட்வாத்தியம், மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**கழகக் கொடிகள்**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலை நெடுகிலும் ஆலந்தூர் வரை 3 கி.மீ. தூரத்திற்கு கழக கொடிகள் பறந்தது பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கார் மூலம் விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் தா.மோஅன்பரசன் பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

அவரைத் தொடர்ந்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, து.மூர்த்தி, எல்.இதயவர்மன்,

மாவட்ட கழகப் பொருளாளர் மாமல்லபுரம் வெ.விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி, எம்.டி.லோகநாதன்,

நகரச் செயலாளர்கள் டி.பாபு, எஸ்.ஜபருல்லா, எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், எஸ்.சேகர், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், இரா.சுரேஷ்,

பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், எஸ்.சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, செ.அருள்தேவிஇரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் பொன்.சதாசிவம், மாநகரப் பொருளாளர் வ.விஜயரங்கன்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வீ.விஜய குமார், டி.கே.கமலக்கண்ணன், பா. ராமமூர்த்தி, கே.மணி கண்டன், கோ.ஜானகி ராமன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், விக்னேஸ்வரன், ஜெகதீப், சங்கீதா

மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் உதயா கருணாகரன், ச.சசிகலா, எஸ்.கே.நெப்போலியன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், த.வினோ த்குமார், மருத்துவர் டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், தாம்பரம் மாநகர இளைஞர்அணிஅமைப்பாளர் சத்திய பிரபு,

முதல்வரை வரவேற்று மீனம்பாக்கம் விமான நிலையம் முன்பு ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் வரை 5 இடங்களில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரம்மாண்டமான வரவேற்பு பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர், ஜி.எஸ்.டி. சாலை பிளாட்பாரம் தடுப்புக்கு உள்ளே நீண்ட வரிசையில் தமது கரங்களில் கழக கொடிகளையும், வரவேற்பு பதாகைகளை ஏந்தி வரவேற்பு அளித்ததை பார்வையிடும் வகையில் முதல்வரின் கார் மெதுவாக ஊர்ந்து சென்றது.

முதல்வருடன் மகிழ்ச்சியுடன் சாலையோரம் வரிசையாக நின்றிருந்த கழகத் தோழர்களுக்கு கையசைத்து வணக்கம் தெரிவித்தார்.

மொத்தத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் முதல்வர் அவர்களுக்கு அளித்த எழுச்சிமிகு வரவேற்பு மிக பிரமாண்டமான வரவேற்பாக அமைந்தது.

# திருப்பத்தூர் மாவட்டம் - ஜோலார்பேட்டையில் வாக்காளர்களுக்கு நன்றி!

## க. தேவராஜ் எம்.எல்.ஏ. முன்னிலையில்: சி.என்.அண்ணாதுரை எம்.பி. தெரிவித்தார்!

திருப்பத்தூர், செப். 16 -

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட தாமலேரிமுத்தூர், ஒட்டப்பட்டி, கோனாப்பட்டு, ஏலகிரிகிராமம், பாலனாங்குப்பம், சின்ன வெங்காயப்பள்ளி,கருப்பனூர் உள்ளிட்ட பகுதியில்

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நேற்று ஒன்றிய செயலாளர் கவிதா தண்டபாணி தலைமையில் நடைபெற்றது.

இதில் திருவண்ணாமலை எம்.பி. அண்ணாதுரை கலந்து கொண்டு வாக்கு அளித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசுகையில் மக்களுக்கான திட்டங்களை கொண்டு வருவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. குறிப்பாக மகளிருக்கான திட்டங்கள் மகளிர் இலவசபேருந்துதிட்டம், கலைஞர் உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வன் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி திட்டம், கலைஞர்கனவு இல்ல திட்டம், வீடு தேடி மருத்துவம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்துவதில் ஆளும் தி.மு.க. அரசு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தியதில்லை.

மேலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் அமெரிக்கா வரை சென்று முதலீடுகளை கொண்டு வருகிறார் என பேசினார்.

இதில் ஒன்றிய செயலாளர் திருப்பதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வடிவேல், முன்னாள் ஒன்றிய செயலாளர் காந்தி, ஒன்றிய துணை செயலாளர் சதிஷ், தி.மு.க. நிர்வாகிகள் மணி, தண்டபாணி, மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேருந்து நிலையம் முதல் பேரறிஞர் அண்ணா சிலை வரை பேரணியாக சென்று அவரின் திருவுருவ சிலைக்கு மாவட்டக் கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வ நாதன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. கே.கே.நகர் அண்ணா நகர் கே புதூர் பகுதி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழகச் செயலாளர்கள், செல்லூர் அறிவு நிதி, புண்ணியமூர்த்தி, சித்திக் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், பெ.குழந்தைவேலு, மா. ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், முருகவேல், இளைஞரணி சௌந்தர்ராஜன், மாணவரணி அன்பு மற்றும் திரளான கழக நிர்வாகிகள், பகுதி கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.

# செப்டம்பர் 15 பொறியாளர்கள் தினத்தை முன்னிட்டு - பொன்குமார் வாழ்த்து!



சென்னை, செப்.16 -

தமிழ்நாடுவிவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு :-

செப்டம்பர் 15 ஆம் நாளை கட்டுமானப் பொறியாளர்கள் தினமாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருவது அறிந்ததே. இந்த நாளில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடக்கூடிய லட்சக்கணக்கானப் பொறியாளர்களுக்கு உள்ளார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டுமானத் தொழில் என்பது ஒரு நாட்டின் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளக்கூடிய முக்கிய தொழிலாகும். எந்த நாட்டில் கட்டமைப்பு பணிகள் சிறப்பாக இருக்கிறதோ அந்த நாட்டில் தொழில் தொடங்கி, வேலைவாய்ப்பு பெருகி, பொருளாதாரம் வளர்ச்சி பெறும். அப்படிப்பட்ட மிக முக்கிய பணியாற்றக் கூடியவர்கள் இந்த கட்டுமானப் பொறியாளர்கள் ஆவர். கட்டுமானப் பொறியாளர்களின் இப்படிப்பட்ட சிறந்த பணிகளை இந்த நேரத்தில் அனைவரும் நினைவு கூர்ந்து பாராட்டப்பட வேண்டும். துறை முகங்கள், விமான நிலையங்கள், ரயில்வே பாதைகள், மேம்பாலங்கள், சாலைகள், அணைகள் என வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளக்கூடிய கட்டுமானங்களை வடிவமைத்து செய்து முடிக்க கூடிய ஆற்றலுக்கு சொந்தக்காரர்கள் கட்டுமானப் பொறியாளர்கள் ஆவர். அவர்களை நினைவு கூறும் வகையில் திரு.விசுவேசுவராயா பிறந்தநாளான இந்த நாள் பொறியாளராக தினமாக கொண்டாடபடுகிறது.

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு கட்டுமானத் துறையை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதை இந்த நாடு அறியும். கட்டுமானம் மற்றும் மனைத்தொழில் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அமைப்புகள் வைத்த கோரிக்கை களை நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் மற்றும் துறை சார்ந்த அமைச்சர்களை சந்தித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு அதற்கான அறிவிப்புகளும், ஆணைகளும் வெளியிடப்பட்டு வருவதை துறை சார்ந்த அனைவரும் அறிவர். இது இந்த தொழிலை மேலும் வளர்ச்சி அடைய செய்யும். அதன் மூலம் தொழில் சார்ந்த அனைவரும் குறிப்பாக கட்டுமானப் பொறியாளர்களும் பயன்பெருவர்.

கட்டுமானப் பொறியாளர்களுக்கு ஒரு பொறியாளர் கவுன்சில் அமைத்திட வேண்டும் என்பது அவர்களது நீண்ட கால கோரிக்கையாகும். வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் இருப்பதைப் போல் ஆர்க்கிடெக்கிற்கு ஒரு கவுன்சில் இருப்பது போன்று கட்டுமானப் பொறியாளர்கள் தங்கள் தொழிலை வரைமுறைப்படுத்திக் கொள்ள புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் பொறியாளர்களுக்கான ஒரு கவுன்சில் அமைப்பது அவசியமாகிறது. இந்த நீண்ட நெடிய நாள் கோரிக்கையை இன்றைய அரசும் முதலமைச்சரும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருப்பது நமக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த துறையின் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு நாம் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அவர் பொறியாளர் கவுன்சில் அமைப்பது சம்பந்தமான விரிவான அறிக்கையை துறையிடம் கேட்டிருப்பது இந்த பணியின் அடுத்த கட்ட முன்னேற்றமாகும். எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் பொறியாளர் கவுன்சிலை இந்த அரசு அமைத்து கொடுத்து விடும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு இருக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு பொறியாளர்கள் தினத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம். அனைத்து பொறியாளர்களுக்கும் மீண்டும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு சங்கரன்கோவில் நகரில் பழைய பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ வெண்கலசிலைக்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது.நிகழ்வில் ராணிஸ்ரீ குமார் எம்.பி,தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, மாவட்ட பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஸ்வரி,சாகுல் ஹமீது, துணை செயலாளர்கள் சுப்புத்தாய்,மாரியப்பன்,அணி அமைப்பாளர்கள் சந்திரன், உதயகுமார்,நகர அவை தலைவர் முப்புடாதி,கார்த்தி,ராஜ், துரைப்பாண்டியன்,தடிகாரன், சரவணன்,ராமலிங்கம், விஜயகுமார்,புஷ்பம்,அலமேலு உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் வாக்காளர்களுக்கு சி.என்.அண்ணாதுரை எம்.பி. நன்றி கூறினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.